MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – II ISSUE – 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

நற்றிணையில் குறிப்புப்பொருள் வழிப் பொருட்புலப்பாடு

முனைவர் பெ.ஆனந்தி
உதவிப்பேராசிரியர்,முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
ananthi-tam@sfrcollege.edu.in – 9659664915

DOI 10.5281/zenodo.14961591.

Abstract :

One of the various methods of expressing meaning used in Tamil literature is the method of allusion. Allusion is the process of expressing messages that cannot or should not be expressed explicitly by placing them on other natural scenes and the actions of other living beings. This discipline is established to examine the method of expressing meaning through such allusion.

Key Words : Sangam Literature – Allusion – Natural Life

தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையிலான பொருள் புலப்பாட்டு முறைகளுள் குறிப்புப் பொருள் முறையும் ஒன்று. வெளிப்படையாகக் கூற முடியாத அல்லது கூறக் கூடாத செய்திகளைப் பிற இயற்கைக் காட்சிகளின் மீதும் பிற உயிரினங்களின் செயல்களின் மீதும் வைத்துக் கூறுதல் குறிப்புப் பொருள் எனலாகிறது. இத்தகைய குறிப்புப் பொருளின் வழிப் பொருளைப் புலப்படுத்தும் முறைமையை ஆராயும் பொருட்டு இவ்வியல் அமையப் பெறுகின்றது.

குறிப்புப்பொருள் - விளக்கம்:

'குறி' என்னும் சொல்லிற்கு மறைமுகமாகக் கூறல் என்ற பொருள் கொள்ளலாம். 'கிரேக்கச் சொல்லான தோசீமியோன்(Tosemion) என்பதைத் தழுவி ஆங்கிலத்தில் சீமியாடிக்ஸ் (Semiotics) சீமியாலஜி (Semiology) என்ற சொற்கள் உருவாக்கப்பட்டன. கிரேக்க மூலச்சொல் 'குறி' எனும் பொருண்மையைக் கொண்டது. ஆங்கிலச் சொற்கள் இரண்டும் "குறிகளைப் பற்றிய கல்வி' என்ற ஒரே பொருண்மையைக் கொண்டவையாகும். மேலும் "குறி என்பது ஒரு மனக்குறிப்பாக (Mental Concept) இருக்கலாம் என்ற விளக்கமும் கருதத்தக்கது. அகராதிகள் பலவும் குறிப்புப் பொருள் எனும் சொல்லிற்கு , "குறிப்பால் உணர்த்தப்படும் பொருள்" [1] எனவும் "குறிப்புச் சொல்லால் உணரப்படும் பொருள்" [2] எனவும் விளக்கம் தருகின்றன. எனவே, வெளிப்படையாகத் தன் பொருளை எடுத்துரைக்காது மறைமுகமாகத் தெரிவிக்கும் சொல்லையும் பொருள் 'குறிப்புப் பொருள்' எனலாம்.

குறிப்புப்பொருள்பற்றியஅறிஞர்கள்கருத்து:

http://Creativecommons.org//license/by/4.0/.

குறிப்புப் பொருள்கள் குறித்துப் பல அறிஞர்களும் பல்வேறு வகையிலான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

- பனியன் (Bunyan) என்பவர் இத்தகைய குறிப்புப் பொருளை "மறைபடு உவமைகள் (Dark Similitudes)" என்று குறிப்பிடுகின்றார்.
- "ஏதேனும் ஒன்றனை நேரடியாக அன்றி மறைமுகமாகவும் வேறொரு ஊடுபொருள் வாயிலாகவும் குறிப்பிடும் வெளியீட்டு முறையைக் குறியீட்டியல்" என அன்னிதாமஸ் விளக்கிச் சொல்கின்றார்.
- முற்றவும் வெளிப்படையாகக் கூறாதது குறிப்பு எனப் பெறும் என்ற தொல்காப்பியரின் கருத்தையே கு.வெ.பா. ஏற்றுக் கொண்டுள்ளார்.
- குறியியலை, "சமூகத்தில் பொருண்மையைப் புலப்படுத்துதல் பற்றிய அறிவியல்' என்று வரையறுக்கிறார் கெர்எலம்"
- "மனிதர்களுக்குள் கருத்துப்புலப்படுத்தும் (Communication) செய்யப்படும்முறையை அதன் எல்லாப் பாங்குகளிலும் சூழல்களிலும் வகைகளிலும் வைத்துப் படித்தற்குரிய கல்விப்புலம்" என்று குறியியல் என்னும் ஆய்வுப்புலம் பற்றி வரையறை செய்கிறார் எம்.டி.முத்துக்குமாரசாமி.
- "நார்மன் அர்ஸ்ட்டு (Norman Hurst) என்பவர் குறிப்பு வகைப்பொருள் (Allegory) பற்றிக் குறிப்பிடுகையில் விளக்கப்படும் இயற்கையின் காட்சியும் கற்பனையும் தெளிவும் குறிப்பாற் புலப்படுத்தப்படும் கருத்திற்கும் எண்ணத்திற்கும் ஒத்தசைப்பவனாக இருக்க வேண்டும் என்கின்றார்"

இவ்வாறாகப் பல அறிஞர்களின் கருத்துகளும் குறிப்புப்பொருளை விளக்கிய போதிலும் மறைமுகமாக ஒரு பொருளையும் நேரடியாக வேறொரு பொருளையும் தரக்கூடியவை குறிப்புப் பொருள்களாகின்றன.

இலக்கியமும் குறிப்புப்பொருளும்:

காலங்காலமாகத் தோன்றிவரும் அனைத்துவகை இலக்கியங்களிலும் குறிப்புப்பொருள் கையாளப்பட்டுள்ளது. "குறியீட்டாக்கத்தின் அடிப்படை நோக்கங்களாகக் கூறப்படும் மறைத்துக்கூறல், குறித்துக்காட்டல் என்னும் இரண்டும் மிகப் பழங்காலந்தொட்டே தமிழ் இலக்கண இலக்கிய மரபுகளில் இருந்து வந்துள்ளன" [3] எனவே, சங்க இலக்கியத்தில் உள்ளுறை, இறைச்சி என்னும் வகையில் குறிப்புப்பொருள்கள் பயின்று வந்துள்ளன. இவை தவிர்த்துக் காப்பியங்களிலும் சமய,தத்துவ நூல்களிலும் குறிப்புப் பொருள்கள் பல அமையப் பெற்றுள்ளன. "குறிப்புப் பொருள் இலக்கியத்தின் உயிராகும். எனவே, பண்பட்ட மொழி எதுவாயினும் அம்மொழி இலக்கியத்தில் குறிப்புப்பொருள் இருந்தே தீரும்" [4] எனவே பலவகை இலக்கியங்களிலும் குறிப்புப்பொருள்கள் சிறந்த பொருள் புலப்பாட்டிற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளன.

http://Creativecommons.org//license/by/4.0/.

நற்றிணையில் குறிப்புப்பொருள்:

நற்றிணையில் வரப் பெறும் பாடல்கள் பலவற்றிலும் பல குறிப்புப் பொருள்கள் அமைந்துள்ளன. "எந்த ஒரு கருத்தினையும் நேரடியாகச் சொல்லாது உய்த்துணரும்படி விடும்பொழுது தான் அது தீவிரப் பயனை விளைவிக்கும்" [5] என்ற கருத்திற்கேற்ப நற்றிணையிலும் பல கருத்துகள் குறிப்புப்பொருள்களின் வழி உய்த்துணரும் வகையிலேயே அமைந்துள்ளன. இத்தகைய குறிப்புப்பொருள்களை அவை உணர்த்தும் பொருட்களின் அடிப்படையிலேயே நாம் பகுத்துக் காண முடிகின்றது.

இகழ்ச்சிக் குறிப்பு:

நற்றிணையில் வரப்பெறும் பாடல்களில் தோழி தலைவனை இகழ்வதாகச் சில குறிப்புப் பொருள்கள் அமைகின்றன. அதனை,

"காழின் குத்திக் கசிந்தவர்அலைப்ப
கையிடை வைத்து மெய்யிடைத் திமிரும்
முனியிடைக் கவளம்போல நனிபெரிது
உற்ற நின்விழுமம் உவப்பென்" (நற்360 : 7-10)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன. இதில் பாகன் தன்னைப் பலரும் இகழ்ந்த காரணத்தால் அவன் யானையை இரும்பு முள்ளால் துன்புறுத்தினான். பின்பு அதற்குக் கவளமிட்ட பின் யானை அக்கவளத்தைத் துதிக்கையால் எடுத்து உடம்பில் வாரிக் கொண்டது என்கிறாள் தோழி. இதன்வழி 'தலைவனே! நீ எங்களை நோகச் செய்து , பரத்தையிடத்துச் சென்றாய். இப்போது மீண்டும் யானைக்குக் கவளமிட்டது போல எங்களைக் காண வந்திருக்கிறாய். உன்னைத் தலைவி தூக்கி எறிந்திடுவாள். நின் பரத்தையையே கூடி மகிழ்வோடு வாழ்! எனக் கூறும் குறிப்புப்பொருள் புலப்படுகிறது. மேலும்,

"ஓங்கிற் புணரிபாய்ந்து ஆடுமகளிர்
அணிந்திடு பல்பூமரீஇ ஆர்ந்த
ஆபுலம் புகுதரு பேர்இசை மாலைக்" (நற்395 : 6-8)

என்ற பாடலடிகளும் தலைவனை இகழ்ந்து வரைவுக்குத் தூண்டும் பொருளைக் கொண்டவையாக அமைந்துள்ளன. அதாவது , நீரிலாடிய மகளிர் சூடி எறிந்த பூக்களைப் பசு தின்று மீண்டும் தன்புலத்திற்குச் சென்றது எனத் தோழி கூறும் இம்மொழிகள் , 'நீ நுகர்ந்த தலைவியின் நலத்தை அயலார் உரிமை கொண்டு தமதாக்க உள்ளனர்' எனவே நீ கவர்ந்து சென்ற எம் நலத்தைத் தந்து விட்டுச் செல்' என இகழும் பொருளை எடுத்துரைக்கின்றன. இவ்வாறாக, நற்றிணையில் இடித்துரைக்கும் வகையில் குறிப்புப்பொருள்கள் அமைகின்றன.

அலர் பற்றிய குறிப்புகள்:

http://Creativecommons.org//license/by/4.0/.

தலைவன் தலைவியின் களவொழுக்கத்தை அறிந்த ஊரார் அவர்களைத் தூற்றுவது அலராகிறது. நற்றிணையில் தோழி தலைவனிடத்து அலர் எழுந்ததை வெளிப்படையாக எடுத்துரைக்காமல் குறிப்பாக வெளிப்படுத்துகிறாள். அதாவது,

“செந்நெல்அரிநர்கூர்வாட்புண்ணுறக்
……… ………… …… ……….. ….
தன்னுறுவிழுமம்அறியாமென்மெல
தெறுகதிர்இன்துயில்பசுவாய்திறக்கும்
பேதைநெய்தற்பெருநீர்ச்சேர்ப்பற்கு” (நற்275 : 1-6)

என வரும் பாடலடிகளில் தலைவி , ஊரில் அலர் எழுந்ததைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறாள். அதாவது, செந்நெல்லோடு அறுபட்ட நெய்தல் மலர் தன் துன்பம் மறந்து கதிரவனைக் கண்டவுடன் மலரும் என்கிறாள். ஊரார் எழுப்பும் அலர் என்னைக் கொன்றாலும் உன்னைக் கண்ட நொடியில் என் முகம்மலரும் என்ற குறிப்புப்பொருளைப் பெறமுடிகிறது. மேலும்,

“கொடுங்குழிமருங்கின்இரைவேட்டுஎழுந்த
கருங்கால்குருகி;ன்கோள்உயர்ந்துபோகிய
………… ……… ………… …………
வண்டுபடுவான்போதுவெரூஉம்” (நற்211 : 3-9)

என்ற பாடலடிகள் குருகிடமிருந்து தப்பிய இறாமீன் தாழம்பூவைக் குருகெனக் கருதி அஞ்சி நிற்பதைக் குறிப்பிடுகிறது. இது ஊரார் கூறிய அலர் மொழிகண்டு அஞ்சிய தலைவி அதைக் கேட்டு அன்னையும் சினந்து கொள்வாளோ என ஏங்கும் பொருளைக் குறிப்பாக உணர்த்துகிறது.

இவ்வாறாக, அலர் பற்றிய பல பொருளினைத் தலைவியும் தோழியும் குறிப்பாக வெளிப்படுத்தியமை நற்றிணை வாயிலாகத் தெரியவருகின்றது.

தலைவனின் குணங்கள் பற்றிய குறிப்புகள்:

நற்றிணையில் பல பாடல்களில் தலைவனின் செல்வவளமை , பொறுப்பின்மை, முயற்சி, அஞ்சாமை, பரத்தை நாட்டம் முதலான பல குணங்கள் பற்றிய குறிப்புப் பொருள்களைக் காண முடிகின்றது.

“நெடுந்தேர்பண்ணிவரல்ஆனாதே” (நற்207 : 4)
“பசுங்கேழ்இலையநறுங்கொடித்தமாலம்
தீம்தேன்கொள்பவர்வாங்குபுபரியும்” (நற்292 : 2-3)

என்ற பாலடிகளில் தலைவனின் செல்வவளத்தை , தேரில் வருவதான குறிப்பு வழியும் , தமாலக் கொடியை வேடர் அறுத்துச் செல்கின்றனர். அதுபோல, அரசகுமாரனாக இருப்பினும் உன்னையும் தமர் துன்புறுத்துவர் என்ற குறிப்பின் வழியும் குறிப்பிட்டுள்ளனர். மேலும்,

http://Creativecommons.org//license/by/4.0/.

"குருளை நீர்நாய் கொழுமீன் மாந்தி
தில்லை அம்பொதும்பில் பள்ளிகொள்ளும்" (நற்195 : 2-3)

என்ற பாடலடிகள் வழித் தலைவனின் பொறுப்பின்மையைக் குறிப்பாக வெளிப்படுத்துகிறது. அதாவது நீர்நாயின் குட்டிமீனைத் தின்று மரப்பொந்தில் பள்ளி கொள்ளும் என்றது தலைவனும் தலைவியின் நலன் நுகர்ந்து மணம் புரியும் கவலையற்றுத் திரிவதைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறது. இதோடு,

"கழுநீர்மேய்ந்தகருந்தாள்எருமை
பழனத்தாமரைப்பனிமலர்முணைஇ" (நற்260 : 1-2)

என்ற பாடலடிகள் தலைவன் தாமரைமலர் போன்ற தலைவியை விரும்பாது விடுத்து கழுநீரிலுள்ள மலராகிய பரத்தையை நாடிச் சென்ற எருமை போன்றவன் என்ற குறிப்புப் பொருளை எடுத்துரைக்கிறது.

இவ்வாறாகப் பல பாடலடிகள் தலைவனின் பல்வேறு குணங்களையும் குறிப்புப்பொருளாகப் புலப்படுத்தும் தன்மை கொண்டவையாக அமைந்துள்ளன.

அச்சக் குறிப்புகள்:

தலைவன் வரும் வழியின் இடையூறுகள் குறித்தும் அலர் குறித்தும் தலைவியின் தாயின் கண்டிப்பு குறித்தும் அச்சம் ஏற்படுவது உண்டு. அவ்வகையில் நற்றிணையில்,

"நெடுஞ்சினைப் புன்னைக் கடுஞ்சூல் வெண்குருகு
உலவுத் திரைஓதம் வெரூஉம்" (நற்31 : 10-11)

என்று தலைவியின் அச்சம் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சூலுற்ற குருகு கடலின் அலையோசைக்கு அஞ்சுகிறது எனக் குறிப்பிடப்பட்ட இவ்வடி தலைவியும் தாயின் கடுஞ்சொல்லிற்கு அஞ்சி நிற்பதைக் குறிப்பாக உணர்த்துகிறது. மேலும்,

"எய்ம்முள்அன்னபரூஉமயிர்எருத்தின்
செய்யும்மேவல்சிறுகட்பன்றி
………. ……. …… ….
பாங்கர்ப்பாக்கத்துபல்லிபட்டெனா" (நற்98 : 1-6)

என்ற பாடலடிகளில் பன்றி தினைப்புனத்தில் மேயக் கருதி பின் பல்லியின் ஓசை கேட்டுத் தான் செல்லும் வழியில் இடையீடு வருமெனக் கருதி மீண்டும் தன் இருப்பிடம் செல்லும் என்ற பொருள் வந்துள்ளது. இஃது பன்றி கூட தான் வரும் வழியின் இடையூறு அறிந்து திரும்பி செல்லும் போது தலைவன் மட்டும் கொடிய வழியில் இரவில் வருகிறானே என்ற தலைவியின் அச்சநிலை குறிப்பாக வெளிப்படுத்தியுள்ளது.

பிரிவு பற்றிய குறிப்புகள்:

தலைவன் தலைவியை விடுத்துப் பொருள் காரணமாகப் பிரிதல் உண்டு. அப்படிப் பிரியும் வேளையில் தன் பிரிவை நேராகக் கூறுதல் இல்லை. "ஒரு செய்தி பெறுநரின்

http://Creativecommons.org//license/by/4.0/.

உணர்வுகளைத் தூண்டி அவரைச் செயல்படச் செய்யும் போது திறம்படச் சொல்லப்பட்ட செய்தியாகக் கருதப்படுகிறது"[6] என்பதற்கேற்ப நற்றிணையில்,

"குறிப்பின் கண்டிசின் யானே நெறிப்பட
வேலும் இலங்கு இலைதுடைப்ப பலகையும்
பீலி சூட்டிமணி அணிபவ்வே
பண்டினும் நனிபல அளிப்ப; இனியே" (நற்177 : 4-7)

என்ற பாடலடிகள் அமைந்துள்ளன. அதாவது தலைவன் , வேலினைத் துடைத்து வைத்தார்; கிடுகினையும் மயிற்பீலியும் சூட்டினார் ; மணியையும் அணிந்து வைத்தார். இஃதோடு என்னிடத்து முன்பில்லாத பல மடங்கான அன்பு செய்கிறார். தலைவன் செய்யும் இத்தகைய செயல்கள் தலைவன் என்னை விட்டுப் பிரிய முற்படுகிறான் என்ற குறிப்புச் செய்தியை உணர்த்துகின்றன எனத் தலைவி கூறுகிறாள். எனவே தலைவனின் பிரிவு குறிப்பால் உணர்த்தப்பட்டு அதைத் தலைவி புரிந்து கொள்ளுதலாகிய மிகச் சிறந்த பொருட்புலப்பாடு நற்றிணையில் அமையப் பெற்றுள்ளது.

வரைவு வேண்டும் குறிப்புகள்:

தலைவன் தலைவியை வரைவு முடிக்க வருவான் எனத் தோழி தலைவியைக் குறிப்பாக ஆற்றுவித்தலும் உண்டு. குறிப்புப்பொருள் பாடலில் , "ஒரு பொருள் அதனோடு இயைபுடைய இன்னும் ஏதோ ஒரு பொருளைக் குறியீடாகக் காட்டுவது அல்லது அதற்குப் பதிலாக நின்று தெரியப்படுத்துவது"[7] என்ற விளக்கத்தின்படி,

"கருங்கல் வேங்கை நாள்உறு புதுப்பூ
போன் செய்கம்மியன் கைவினை கடுப்ப
நகை வனப்புற்ற கண்ணழி கட்டழித்து
ஒலிபல் கூந்தல்அணி பெறப்புனைஇ
காண்டற் காதல் கைம்மிக கசுடீஇயாற்கு" (நற்313 : 1-5)

என்ற பாடலடிகள் நற்றிணையில் அமைந்துள்ளன. தோழி தலைவியை நோக்கி வேங்கைமலர்கள் பொன்போலப் பூத்துள்ளன. இவற்றை உன் கூந்தலில் சூட்டி மகிழப் போகும் நாள் எப்போது வரும் ? என்கிறாள். அதாவது வேங்கை மலரைச் சூடும் காலம் வரைவுக்கு உகந்த காலமாகும். எனவே, இங்கு வேங்கை மலர்கள் வரைவு வேண்டும் குறிப்புப்பொருளைப் புலப்படுத்துகின்றன. மேலும் , தலைவன் தலைவியின் தமரை மகிழ்விக்க பொருள் தேடித் திரும்பி மணமுடிப்பான் என்ற பொருளைக் குறிப்பாக எடுத்துரைக்கும் வகையில் , 57, 63, 78, 91, 228, 251, 263 முதலான பாடல்கள் நற்றிணையில் அமைந்துள்ளன. இதில்,

"மிகுமீன் உணக்கிய புதுமணல் ஆங்கண்
கல்லென் சேரிப்புலவற் புன்னை
விழவுநாறு விளங்குஇணர் அவிழ்ந்து உடன்கமழும்" (நற்63 : 2-4)

http://Creativecommons.org//license/by/4.0/.

என வரும் பாடலடிகள் மீன் உணக் கலால் ஏற்படும் புலவு நாற்றத்தைப் புன்னை மரமலர்கள் நீக்குகிறது என்னும் கருத்தைக் கொண்டுள்ளன. ; தலைவன், தலைவியின் பெற்றோர் விரும்பும் பொருளைக் கொடுத்துத் தலைவியை மணமுடித்து மகிழ்வான் என்ற குறிப்புப்பொருள் பெறப்படுகிறது. இவ்வாறாக, வரைவு வேண்டுதல் எனும் பொருளைக் குறிப்பாக உணர்த்தும் பாடல்களும் நற்றிணையில் அமைந்துள்ளன.

நம்பிக்கைக் குறிப்புகள்:

நற்றிணையில் தலைவன் தன் பிரிவின் போது தலைவியைத் தோழி பாதுகாப்பாள் என்ற நம்பிக்கையையும் கொண்டிருந்தனர் என்ற செய்தி குறிப்பாகச் சில பாடல்களில் அமைந்துள்ளது. “அகப்பாடல் மரபில் கோரிக்கைகள் அல்லது விருப்ப வெளியீடுகள் வெட்ட வெளிச்சமாகவோ நேரடியாகவோ சொல்வதில்லை”[8] என்பதற்கேற்ப,

“பெருங்களிறு உழுவை அட்டென இரும்பிடி
உயங்கு பிணி வருத்தமொடு இயங்கல் செல்லாது
……. ……….. ………… ………
பைதல் அம்குழவி தழீஇய ஒய்யென” (நற்47 : 1-4)

என்ற வரிகளில் தலைவியை அலர் வாட்டிய போதிலும் தான் உடனிருந்து காப்பதாகத் தோழி யானையின் இறப்பிற்குப் பிடி கன்றோடு வருந்தி நிற்கும் நிலையைக் குறிப்பிட்டுக் கூறுகிறாள். மேலும், தலைவன் தலைவியைத் தோழி ஆற்றுவிப்பாள் என்ற தன் நம்பிக்கையை,

“வழிநார் ஊசலின்கோடை தூக்குதொறும்
துஞ்சுபிடி வருடும் அத்தம்” (நற்162 : 10-11)

என்ற பாடலடிகளிலும்,

“பனிப்புதல் ஈங்கைஅம் குழைவருட
சிறை குவிந்திருந்த பைதல் வெண்குருகு
பார்வை வேட்டுவன் காழ்களைந் தருள” (நற்312 : 2-4)

என்ற பாடலடிகளிலும் குறிப்பாக உணர்த்துகிறான். மேலும், தலைவனைக் கண்ட தலைவியின் உறவினர்கள் அவனை நிச்சயம் ஏற்றுக் கொள்வர் என்ற நம்பிக்கையைத் தோழி,

“முடமுதிர் பலவின் குடம்மருள் பெரும்பழம்
கல்கெழு குறவர் காதல் மடமகள்
கருவிரல் மந்திக்கு வருவிருந்து அயரும்” (நற். 353 : 4-6)

என்ற வகையில் குறிப்பாக எடுத்துரைக்கிறாள். இவ்வாறாகப் பலரின் நம்பிக்கை உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் பல பொருட்புலப்பாடுகள் நற்றிணையில் வந்துள்ளன.

எதிர்காலச் சிந்தனை பற்றிய குறிப்புகள்:

தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கும் குணம் அனைவருக்குமே உண்டு. அவ்வகையில், நற்றிணையில் தோழியும் தலைவனும் தலைவியும் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கின்றனர். இதை வெளிப்படையாக இல்லாமல் குறிப்புப்பொருளாகப் புலப்படுத்தி

http://Creativecommons.org//license/by/4.0/.

உள்ளனர். “பெண்கள் தங்களின் கருத்துகளைத் தெரிவிக்கச் சமுதாயம் பல வகைகளில் இடையூறாக இருந்திருப்பதால் குறியீடுகளில் மேல் வைத்து உணர்வுகளை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்”[9] அவ்வகையில் தோழியும் தலைவியின் எதிர்காலம் குறித்தத மது சிந்தனையைத்,

“திண்திமில் பரதவர் ஒண்சுடர்க் கொளீஇ
……. ……… ………. …….
தேம்கமழ் தேறல் கிளையொடு மாந்தி” (நற்388 : 4-8)

என்ற பாடலடிகளில் விளக்குகிறாள். தான் ஈட்டிய பொருளைச் சுற்றத்தோடு மகிழ்ந்து பகிர்ந்து கொள்ளுதல் போலத் தலைவியும் வாழ்வாள் என்ற குறிப்புப்பொருளை இதில் உணரலாம். இது போன்ற எதிர்காலத்தில் விருந்து அயர்தல் பற்றியக் குறிப்புப் பொருள்கள் 85, 336, 367, 391 முதலான பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும்,

“திமில் மேற்கொண்டு திரைச்சுரம் நீந்தி
வாள்வாய்ச் சுறவொடு வயமீன் கெண்டி
நிணம் பெய்தோணியர் இம்மணல் இழிதரும்
பெருங்கழிப் பாக்கம் கல்லென
வருமே தோழி கொண்கன் தேரே” (நற்111 : 6-10)

எனத் தலைவியிடத்துத் தோழி தலைவன் வேற்று நாட்டிலிருந்து பொருள் கொண்டு வந்து குவிப்பான் என்ற தன் எதிர்காலச் சிந்தனையைக் குறிப்பாகப் பெற வைக்கிறாள். அதனைச் சிறுவர்கள் திமில்களில் ஏறிச் சென்று சுறாமீன்களைக் கொணர்வர் என்கிறாள். இஃது மேற்சொன்னப் பொருளைக் குறிப்பாக உணர்த்துகிறது. இவ்வாறாகப் பல எதிர்காலச் சிந்தனைகளும் குறிப்பாகப் புலப்படுத்தப்படுகின்றன.

வருத்த மனநிலைக் குறிப்புகள்:

சங்க இலக்கியங்களில் தலைவன் , தலைவி, தோழியின் வருத்த மனநிலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. “அகத்தில் இருக்கும் சிறப்பு என்னவென்றால் எதனையும் வாய் திறந்து வெளிப்படையாகச் சொல்லும் மரபு இல்லை. சுட்டி உணர்த்தும் முறைமையே உண்டு”[10] அவ்வகையில், தங்களது வருத்தத்தையும் குறிப்பாகவே புலப்படுத்தியுள்ளனர்.

“வம்பலர் தொலைந்த அஞ்சு வருகவலை
அழல்போல் செவிய சேவல் ஆட்டி
நிழலொடு கதிக்கும் நிணம்புரி முதுநரி
பச்சூன் கொள்ளை மாந்தி வெய்துற்று
தேர்திகழ் வறும்புலம் துழைஇ நீர்நயந்து
பதுக்கை நீழல் ஒதுக்க இடம்பெறாஅ” (நற்352 : 3-8)

http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற பாடலடிகளில் பாலை நிலத்தில் ஆறலைக் கள்வர்களால் கொன்று குவிக்கப்பட்ட பிணங்களைக் கழுகு உண்ணாதவாறு நரி விரட்டி விட்டு உண்ண , உண்ட பின் நீர் கிடைக்காது வருந்தும். நீரோடு நிழலுமின்றி வருந்தும் என்ற பொருள் கூறப்பட்டுள்ளது. இது தலைவன் தலைவியின் பசலை நீங்க காத்து , தான் வரைவு மேற்கொள்ள உடன்போக்குச் சென்று, அங்கும் அவளைக் காக்கப் பொருளின்றி வருந்துதலைக் குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளது. இது போன்ற பல பாடல்களில் வருத்த மனநிலை பற்றிய குறிப்புப்பொருள்கள் இடம் பெற்றுள்ளன.

தொகுப்புரை:

நேரடியாகப் பொருள் கூறாது குறிப்பாகத் தன் மன எண்ணங்களை வெளிப்படுத்தும் முறை குறிப்புப் பொருளாகின்றது. சங்க இலக்கியங்களில் உள்ளுறை, இறைச்சி முதலான வகைகளில் குறிப்புப் பொருள்கள் பயின்று வருகின்றன. ஒருவரை இகழும் பொருட்டும் , இடித்துரைக்கும் பொருட்டும் பல குறிப்புப் பொருள்கள் நற்றிணையில் கையாளப்பட்டுள்ளன. அலர் குறித்தும் அச்ச மனநிலை குறித்தும் , பிரிவுநிலை குறித்தும் குறிப்பாகப் பொருள்கூறும் முறையை நற்றிணையைப் புலவர்கள் பயன்படுத்தி உள்ளனர். விரைவு வேண்டுதல் தொடர்பான பல கருத்துகளும் குறிப்பாகவே புலப்படுத்தப்பட்டுள்ளன. தலைவனின் செல்வவளம் , பொறுப்பின்மை, முயற்சி, அஞ்சாமை, பரத்தை நாடல் முதலான பல குணங்களையும் குறிப்புப்பொருள்கள் வழிப் புலப்படுத்தியுள்ளனர். தலைவியைத் தோழி காப்பாள் என்ற தலைவனின் நம்பிக்கையையும் தலைவனைத் தமர் ஏற்பர் என்ற தோழியின் நம்பிக்கையையும் குறிப்புப்பொருள் வழி பெறமுடிகிறது. எதிர்காலத்தில் நீங்கள் இப்படியெல்லாம் இன்புற்று விருந்து பேணுவீர்கள் எனத் தோழி தன் எதிர்காலச் சிந்தனையையும் குறிப்பாகவே புலப்படுத்தியுள்ளாள்.

சாள்றெண் விளக்கம்

1. ச.வே.சுப்ரமணியன் (ப.ஆ) மெய்யப்பன் தமிழ்அகராதி,ப.401
2. தமிழ்ச் சொல்லகராதி, (தொகுதிII) ப.907
3. மொ.இளம்பரிதி, குறியியல் ஒரு சங்கப் பார்வை, ப.121
4. ம.ரா.போகுருசாமி, தமிழ் நூல்களில் குறிப்புப்பொருள், ப.24
5. செ.சாரதாம்பாள், சங்கச்செவ்வியல், ப.208
6. வெ.கிருட்டிணசாமி, தகவல்தொடர்பியல், ப.375-376
7. ஆரார், சிம்பலிசம், ப.30
8. கார்த்திகேசு சிவத்தம்பி, சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும், ப.80
9. ச.மெ.மீனாட்சி சோமசுந்தரம் (ப.ஆ), சங்கஇலக்கியக்கட்டுரைகள் (தொகுதிI) ப.149

http://Creativecommons.org//license/by/4.0/.

10. கார்த்திகேசு சிவத்தம்பி, சங்கஇலக்கியம் கவிதையும் கருத்தும், ப.110

http://Creativecommons.org//license/by/4.0/.